**Date**: 15.04.2021

**DVA** 505/2019

ம.சா. 1 வெண்ணிலா

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

இராதா என்பவரை எனக்கு தெரியும் என்றால் ஆமாம் . அவரின் மகள் பெயர் சௌமியா என்றால் ஆமாம் . சௌமியா என்பவர் 03.03.2014 தேதியன்று சாய்பாபா காவல்நிலையத்தில் என் மீது புகார் அளித்தார் என்றால் ஆமாம் . என்னை அடித்து விட்டு அவர் சென்று புகார் அளித்து விட்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அப்புகாருக்கான மனு இரசீது என்றால் ஆமாம் . அது எமசாஆ 1 ஆகும். ஆனால் அது பொய்யான புகார். என்னிடம் டு வீலர் சொந்தமாக உள்ளதா என்றால் உள்ளது . நான் சுயமாக சம்பாதித்து வாங்கியது. அவ்வண்டியின் எண் என்ன என்றால் ஞாபகமில்லை . ஏனென்றால் அவ்வண்டி எண் மாற்றி விட்டேன் . என்னை அடித்து விட்டு சௌமியா என்பவர் புகார் கொடுத்த பின் நான் சௌமியா மீது புகார் அளித்தேனா என்றால் இல்லை . வண்டிக்கான விலாசம் 34, எம்.ஜி.ஆர் தெரு, வடவள்ளி, கோவை என்றால் சரிதான் . அங்கு இருக்கும் போது தான் வாங்கினேன். வண்டியானது எந்த நிறுவனத்தில் வாங்கியது என்பதற்கான ஆதாரம் எதுவும் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல . நான் கொடுத்துள்ளேன். வண்டியை தவணை முறையில் வாங்கினேனா என்றால் ஆமாம் . அதற்கான இரசீதுகள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். வண்டியானது என் உழைப்பில் வாங்கவில்லை என்றாலும் , 1 ம் எதிர்மனுதாரர் மீது நான் போட்ட ஜீவனாம்ச வழக்கில் நீதிமன்ற உத்தரவின் படி கொடுத்த ரூ - 35,000/-த்தில் தான் வண்டியை வாங்கினேன் என்றால் இல்லை . எனக்கு தமிழ், ஆங்கிலம், கன்னடம் ஆகிய மொழிகள் பேசத் தெரியும் என்றால் கன்னடமும் தமிழும் நன்றாகத் தெரியும் . ஆங்கிலம் குறைவாகத் தான் தெரியும் . நான் என் வீட்டில் கன்னட மொழியில் தான் பேசுவேன் என்றால் ஆமாம். என் அக்காவின் மகன் பெயர் நித்தீஸ் என்றால் ஆமாம் . என் தம்பியின்

மாமனார் மாரிமுத்துவுக்கு ஒரு அண்ணன் உள்ளார் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நான், என் கணவர், என் இரு குழந்தைகளும் குடும்பத்துடன் உள்ளோம் என்றால் ஆமாம். அது எமசாஆ 2 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்டும் புகைப்படத்தில் உள்ளவர் என் மூத்த மகன் என்றால் ஆமாம் . நான் என் 2ம் மகனை அடித்து காயப்படுத்தி அதற்கு அவனது நெற்றியில் தையல் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குழந்தை ஓடி விளையாடும் போது அடி பட்டு விட்டது . எனது 2ம் மகனுக்கு ஜே.எம் மருத்துவனையில் சிகிச்சை அளித்த போது எடுக்கப்பட்டது என்றால் ஆமாம். என் மகன் கீழே விழுந்ததால் சிகிச்சை அளித்தேன் . நான் சொல்வது பொய் என்றாலும் , நான் அடித்து தான் அவனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல . என் தவறான நடவடிக்கையினை பற்றி என் மகன் கேட்டதால் தான் நான் அவனை கொடுமைப்படுத்தி அடித்து அதனால் அவனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல . என் மாமனார் எந்த வருடத்தில் இறந்தார் என்றால் 2007. என் மாமனார் உயிருடன் இருக்கும் போது என் மூத்த மகனை அவர் தூக்கி வைத்திருக்கும் போது ஆவேசமாக பிடுங்கி அவரை காலால் எட்டி உதைத்து கீழே தள்ளி விட்டு கொடுமைப்படுத்தினேன் என்றால் சரியல்ல . மாமனாரிடம் குழந்தையை விட்டு விட்டு தான் நான் மில் வேலைக்கு செல்வேன் . என் மாமனாரின் முகத்தில் கழனித்தண்ணீரை நான் ஊற்றுவேன் என்றால் சரியல்ல . எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் தகராறு ஏற்பட்டு நான் தான் தாலி செயினை கழற்றி அவர் முகத்தில் வீசி விட்டேன் என்றால் சரியல்ல . அவர் தான் என் செயினை அடமானம் வைத்துள்ளார். குழந்தைகளை விட்டு விட்டு தனியாக செல்லக்கூடாது என் தகப்பனார் எனக்கு அறிவுரை கூறியுள்ளார் என்றால் சரியல்ல . குழந்தைகளை நான் அடிக்கடி விட்டு விட்டு வெளியே சென்று விடுவேன் என்றாலும் , என் குழந்தைகள் 1ம் எதிர்மனுதாரரிடம் தான் அப்போது இருப்பார்கள் என்றாலும் சரியல்ல . என்னிடம் தான் இருப்பார்கள். நான் தவறு செய்யும் போது என் தகப்பனாரிடம் சொன்னால் என் மகள் சின்ன பெண் என்றும் தவறு செய்தால் அனுசரித்து போங்கள் என்று சொல்லியுள்ளாரா என்றால் சரியல்ல . என் தகப்பனார் வந்தால் அவரை கேவப்படுத்தி அனுப்பி விடுவார்கள் . அவர் வரவே மாட்டார். என் மாமியாருக்கு சுமார் 72 வயதிருக்கும் என்றால் ஆமாம் . என்

மாமியாரையும் தரக்குறைவாக நான் பேசி அவரிடம் 1ம் எதிர்மனுதாரரை நீங்களே திருமணம் செய்து கொள்வது தானே என்று பேசியுள்ளேன் என்றால் சரியல்ல . நான் 1ம் எதிர்மனுதாரரையும், அவரின் குடும்பத்தாரையும், சகோரர் சந்திரசேகரன், மகேந்திரன், அவரின் மாமனார் மாமியார் முன்னிலையில் கேவலமாகப் பேசி அவமானப்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல . 1ம் எதிர்மனுதாரர் என் தாயாரை ஏன் கேவலமாக பேசுகிறாய் என்று கேட்டால் அவரையும் போடா நாயே வீட்டை விட்டு வெளியே போடா என்று கேவலமாக பேசியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் சபரிமலைக்கு செல்வார் என்றால் ஆமாம் . அவர் கோவிலுக்கு சென்று விட்டு வந்து பிரசாதத்தினை குழந்தைகளுக்கு கொடுத்தால் அதை சாக்கடையில் தூக்கி எறிந்து விடுவேன் என்றால் சரியல்ல . என் குழந்தைகள் 1ம் எதிர்மனுதாரரை பார்த்து பேசிக்கொண்டிருந்தால் குழந்தைகளை அடித்து நான் சூடு போடுவேன் என்றால் சரியல்ல . என் தம்பி மாமனார் , மாமியார், அக்கா, அக்காவின் கணவர் எல்லாருக்கும் 1ம் எதிர்மனுதாரர் அடிபணிந்து நடக்க வேண்டும் என்று கூறி நான் அவரை கொடுமைப்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல . நான் தவறு செய்யும் போது 1ம் எதிர்மனுதாரர் தட்டி கேட்டால் அவரின் முகத்தில்லும் கன்னத்திலும் , கழுத்திலும் அடித்து கிள்ளி வைத்து விடுவேன் என்றால் சரியல்ல . தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் நான் அவ்வாறு கிள்ளிய போது எடுத்தது என்றால் சரியல்ல . 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் என்னை எந்த விதத்திலும் கொடுமைப்படுத்தவில்லை என்றாலும் , நான் வேண்டுமென்றே அவர்களை துன்புறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அவர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . இவ்வழக்கினை நான் 1ம் எதிர்மனுதாரர் எந்த வேலைக்கும் செல்லக்கூடாது என்றும் , அவர் அவரின் தாயாருக்கு எந்த உதவியும் செய்யக்கூடாது என்பதற்காகவும் , அவரை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காகவும் தான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . என் குழந்தைகளை என் சகோர்ரவீட்டிற்கு நான் அடிக்கடி அழைத்து செல்வேன் என்றால் வருடத்திற்கு ஒரு முறை அழைத்து செல்வேன் . அவ்வாறு வரும் போது 1ம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு குழந்தைகள் சென்றால் நான் அவர்களை அடித்து

கொடுமைப்படுத்துவேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி எமோசனல் ஆனதால் ஜே.எம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல . எப்போதும் தெளிவாகத்தான் இருப்பேன். 23.04.2014 தேதியன்று நான் ஜே.எம் மருத்துவனையில் டாக்டர் பிரதீப்பிடம் நான் எமோசனல் ஆகியுள்ளேனன் என்றும் , அதற்கு சிகிச்சை பெற வேண்டும் என்றும் அவர் பரிந்துரை செய்துள்ளார் என்றால் சரியல்ல . நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்ல என்றாலும், என் எமோசனால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 1 முதல் 6 எதிர்மனுதார்களை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எவ்வித முகாந்திரமும் இல்லாத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.